**பத்திரிக்கை செய்தி**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

தமிழ்நாடு மேதகு ஆளுநரின் சார்பில் புரட்சித்தலைவர் எம்ஜிஆர் சத்துணவுத் திட்ட மையங்கள் மற்றும் அங்கன்வாடி மையங்களுக்கு **ஜுன்,08 முதல் வாரத்திற்கு** கோழி முட்டை வழங்குவதற்கு, கோழி முட்டை உற்பத்தியாளர்களிடமிருந்து மூடி, முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர், கடலூர் அவர்களால் வரவேற்கப்படுகிறது. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் ”மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சத்துணவுப் பிரிவில்” 29.5.08 நண்பகல் 12.00 மணி வரையில் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் ”மாவட்ட ஆட்சியர்(சத்துணவுப்பிரிவு), கடலூர்” அலுவலகத்தில் 29.5.08 பிற்பகல் 2.00 மணிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். 29.5.08 பிற்பகல் 3.00 மணியளவில் அப்போது வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும்.

**தேவைப்படும் முட்டைகளின் எண்ணிக்கை(தோராயமாக) .. 8.50 லட்சம்.**

**மதிப்பு (தோராயமாக) .. ரூ.17.00 லட்சம்.**

2. ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பங்கள் குறிப்பிடப்பட்ட படிவத்தில் மட்டுமே சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஒப்பந்தத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட விண்ணப்ப படிவங்கள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் கடலூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், சத்துணவுப்பிரிவு அலுவலகத்தில் பெறப்பட வேண்டும். மேற்படி நிபந்தனைகள் அடங்கிய ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பங்கள் கடலூர் மாவட்ட இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது. கோரிக்கை விண்ணப்பத்துடன் ”மாவட்ட ஆட்சியர், கடலூர்” என்ற பெயரில் எடுக்கப்பட்ட ரூ.500/– (ரூபாய் ஐநூறு மட்டில்)–க்கான தேசியமயமாக்கப்பட்ட வங்கியின் கடலூர் மாவட்டத்தில் மாற்றத்தக்க வங்கி வரைவினை இணைத்து அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்ததாரர் வழங்கவேண்டிய டேவணித் தொகை இந்த விபரங்கள் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. ஒப்பந்தப்புள்ளி மாவட்ட ஆட்சியரால் நியமிக்கப்பட்டுள்ள கொள்முதல் குழு மூலமாக முடிவுசெய்து ஆணை வெளியிடப்படும். கொள்முதல் குழுவின் முடிவே இறுதியானது.

இடம்– கடலூர்.

நாள்– .5.2008. மாவட்ட ஆட்சியருக்காக.

**<u>மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், கடலூர்.</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் பெயர், பதவி மற்றும் முகவரி | .. | திரு.இராஜேந்திர ரத்னூ, இ.ஆ.ப.,<br>மாவட்ட ஆட்சித்தலைவர்,<br>கடலூர் மாவட்டம். |
| 2.அ) | திட்டத்தின் பெயர் / கொள்முதல் செய்யப்படும் பணிகள் சம்பந்தமான விபரம் | .. | புரட்சித்தலைவர் எம்ஜிஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் வாரம் மூன்று முறை முட்டை வழங்குதல் – **ஜுன்,08 முதல் வாரத்திற்கு** முட்டைகள் கொள்முதல் செய்தல். |
| ஆ) | பணி அல்லது கொள்முதல் நடை பெறும் மாவட்டத்தின் பெயர் | .. | கடலூர் மாவட்டம் |
| 3. | எந்த இடத்தில் எந்த தேதிவரை என்ன விலைக்கு ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமாக படிவம் கிடைக்கும் என்ற விபரம் | .. | கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சத்துணவுப்பிரிவில் 29.5.08 நண்பகல் 12.00 மணிவரை ரூ.500/–க்கான வங்கி வரைவு, கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பெயரில், கடலூர் பாரத ஸ்டேட் வங்கியில் மாற்றத்தக்கதாக வங்கி வரைவு கொடுத்து பெற்றுக் கொள்ளலாம். |
| 4. | செலுத்தப்பட வேண்டிய முன் வைப்புத் தொகை | .. | ரூ.17,000/– கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பெயரில், கடலூர் பாரத ஸ்டேட் வங்கியில் மாற்றத் தக்கதாக வங்கி வரைவாக செலுத்த வேண்டும். |
| 5. | நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாளும் நேரமும் மற்றும் இடமும் | .. | கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சத்துணவுப்பிரிவு – 29.5.08 மாலை 2.00 மணிவரை. |
| 6. | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் திறக் கப்படும் இடம், நாள் மற்றும் நேரம் | .. | கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் முன்னிலையில் 29.5.08 மாலை 3.00 மணியளவில். |
| 7. | ஒப்பந்தப்புள்ளி அலுவலர் பொருத்த மானது என தீர்மானிக்கும் முக்கிய மான தகவல் | .. | ஒப்பந்தப் படிவத்தில் உள்ளபடி. |

இடம் கடலூர்

<u>நாள்</u> <u>____.5.2008.</u>

மாவட்ட ஆட்சியருக்காக.

**<u>ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் கீழே தரப்பட்டுள்ளன:–</u>**

1பினை வைப்பு தொகையாக (EMD) ரூ.17,000/– மாவட்ட ஆட்சியர், கடலூர் என்ற முகவரிக்கு வழங்கக்கூடிய வங்கி கேட்பு வரைவோலை 23.5.08–க்கு பின்னர் பெற்றதாக இருக்க வேண்டும்.

2ஒரு முட்டையின் எடை 46 கிராம் அல்லது, 12 முட்டைகள் சேர்த்து 552 கிராம் எடைக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

3. தரமற்ற முட்டைகள் அல்லது கெட்டுப்போன முட்டைகள் அல்லது குளிர்சாதன அறையில் வைக்கப்பட்ட முட்டைகளை கண்டிப்பாக சத்துணவு மையங்களுக்கு வழங்குதல் கூடாது.

4. கால்நடைத்துறை அலுவலர்களின் மேற்பார்வையில் முட்டையின் மீது அந்தந்த வாரத்திற்குண்டான நிறத்தில் ‘‘தமிழ்நாடு அரசு’’ என்ற முத்திரை இடப்பட வேண்டும்.

5. எக்காரணம் கொண்டும் கூடுதல் விலை வழங்க இயலாது.

6. முட்டை உடைதல் போன்ற சேதாரங்களுக்காக 1000 முட்டைகளுக்கு 6 முட்டைகள் இலவசமாக வழங்குதல் வேண்டும்.

7. தரமற்ற முட்டைகள் விநியோகம் செய்வது கண்டறியப்பட்டால் ஒப்பந்தம் ரத்து செய்யப்படுவதுடன் ஒப்பந்ததாரர் மேல் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

8. முட்டைக்கான தொகையை பெற ஊராட்சி ஒன்றிய ஆணையர்களிடமிருந்து விநியோகம் செய்த எண்ணிக்கையுடன் தரமானதாக பெறப்பட்டது என்ற சான்று பெற்று அளித்தல் வேண்டும்.

9. முட்டை வழங்கும் பணியில் சுணக்கமோ அல்லது இழப்போ அரசுக்கு ஏற்பட்டால் விதிமுறைகளின்படி அரசு நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

10. ஒப்பந்தப்புள்ளி விலை போக்குவரத்துக் கட்டணத்தையும் உள்ளடக்கியது ஆகும்.

11. வாரம் மூன்று முறை முட்டை வழங்க இருப்பதால் ஒப்பந்ததாரர்கள் முட்டைகளை மூன்று முறை விநியோகம் செய்ய வேண்டும் அதாவது, திங்கள் கிழமைக்கு வழங்க வேண்டிய முட்டைகள் சனிக்கிழமைக் குள்ளும் புதன்கிழமை வழங்க வேண்டிய முட்டைகள் திங்கள் கிழமைக்குள்ளும் வியாழன்கிழமை வழங்கவேண்டிய முட்டைகள் செவ்வாய் கிழமைக்குள்ளும் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் இறக்கப்பட வேண்டும்.

**மாவட்ட ஆட்சியருக்காக.**

**<u>கடலூர் மாவட்டம்</u>**

**. . . . . . . . .. . .. . .. . . . . <u>புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின் கீழ் முட்டைகள் வழங்குவதற்கான விண்ணப்ப படிவம்</u>**

◊◊◊◊◊

அனுப்புநர்

பெறுநர்

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கடலூர்.

அய்யா,

பொருள்– புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம் – கடலூர் மாவட்டத்திற்கு முட்டைகள் வழங்குதல்.

பார்வை– மாவட்ட ஆட்சியரின் கடிதம் ந.க.6899/08,பிடி2, நாள் .5.2008.

◊◊◊◊◊

பார்வையில் கண்ட கடலூர் மாவட்ட ஆட்சியரின் கடிதத்தின்படி . . . . . . . . . . . . . . . . . சத்துணவு மையங்களுக்கு வழங்கப்பட வேண்டிய முட்டைகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கீழ்கண்டவாறு சமர்ப்பிக்கிறேன்.

1) முட்டை ஒன்றின் விலை (போக்குவரத்து கட்டணம் உட்பட) –

2) ஏற்கனவே முட்டை மொத்த விற்பனையில் முன் அனுபவம்/ சத்துணவு திட்டத்திற்கு முட்டை விநியோகம் செய்யப்பட்டு இருந்தால் அதற்கான விபரம்/அத்தாட்சியுடன் –

3) NEC–ன் சில்லரை முட்டை விற்பனை விலை –

4) EMD செலுத்தப்பட்ட வங்கி வரைவு விபரம் –

5) விண்ணப்ப கட்டணம் செலுத்திய விபரம் (கருவூல சலான்/தேதி) –

தங்கள் உண்மையுள்ள,